


முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12.2.2026) தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் சென்னையில் நடைபெற்ற புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செயலாக்க மாநாட்டில் (Conversion Conclave), "முதலீடுகளின் முன்னேற்ற அறிக்கையை வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், மாநில திட்டக் குழுவின் செயல் துணைத் தலைவர் பேராசிரியர் ஜெ. ஜெயரஞ்சன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி. அருண்ராய், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் மருத்துவர் தாரேஸ் அகமது, ஓம்ரான் ஹெல்த்கேர் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் டாகுடோ ஐவானகா, B.I.G. Tech நிறுவனத்தின் முதன்மை செயல் அலுவலர் ராஜு பாண்டியன், நார் பிரெம்ஸ் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மார்கஸ் பெர், பாரத் பயோ டெக் நிறுவனத்தின் செயல் தலைவர் கிருஷ்ணா எல்லா, டாபர் நிறுவனத்தின் முதன்மை செயல் அலுவலர் மோகித் மல்கோத்ரா, தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று முன்தினம் (12.2.2026) தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் சென்னையில் நடைபெற்ற புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செயலாக்க மாநாட்டில் (Conversion Conclave), ஹுண்டாய் மோட்டார் இந்தியா ஃபவுண்டேஷன் நிறுவனம், 7000 மாணவர்களுக்கு திறன்பயிற்சி மேற்கொள்ளும் திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்ச்சியில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், மாநில திட்டக் குழுவின் செயல் துணைத் தலைவர் பேராசிரியர் ஜெ. ஜெயரஞ்சன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி. அருண்ராய், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் மருத்துவர் தாரேஸ் அகமது, ஓம்ரான் ஹெல்த்கேர் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் டாகுடோ ஐவானகா, B.I.G. Tech நிறுவனத்தின் முதன்மை செயல் அலுவலர் ராஜு பாண்டியன், நார் பிரெம்ஸ் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மார்கஸ் பெர், பாரத் பயோ டெக் நிறுவனத்தின் செயல் தலைவர் கிருஷ்ணா எல்லா, டாபர் நிறுவனத்தின் முதன்மை செயல் அலுவலர் மோகித் மல்கோத்ரா, தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### சென்னையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செயலாக்க மாநாடு!

# ரூ.36,968 கோடி முதலீட்டில் 60,823 பேருக்கு வேலைவாய்ப்பு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்!

சென்னை, பிப்.14-

**சென்னையில் நடைபெற்ற புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செயலாக்க மாநாட்டில் ரூ.36,968 கோடி முதலீட்டில் 60,823 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கிடும் வகையில் 71 புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, ரூ.31,934 கோடி முதலீட்டில் 82,664 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கிடும் வகையில் 52 முடிவுற்ற திட்டங்களைத் தொடங்கி வைத்து, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் ரூ.5,000 கோடி முதலீடு மற்றும் 5000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு என்ற வகையில் 2 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12.2.2026), தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் சென்னையில் நடைபெற்ற புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செயலாக்க மாநாட்டில் (Conversion Conclave), 36,968 கோடி ரூபாய் முதலீட்டில் 60,823 நபர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கிடும் வகையில் 71 புதிய திட்டங்க ளுக்கு அடிக்கல் நாட்டி, 31,934 கோடி ரூபாய் முதலீட்டில் 82,664 நபர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கிடும் வகையில் 52 முடிவுற்ற திட்டங்களைத் தொடங்கி வைத்தார். மேலும், 5,000 கோடி ரூபாய் உறுதியளிக்கப்பட்ட முதலீடு மற்றும் 5000 நபர்களுக்கு உறுதியளிக் கப்பட்ட வேலைவாய்ப்பு என்ற வகையில், 2 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப் பட்டன.

**தமிழ்நாடு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செயலாக்க மாநாடு - 2026**

ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டினை ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாக வளர்ச்சி அடையச் செய்ய வேண்டும் என்றும், அவ்வளர்ச்சி, சீராக, பரவலாக மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியாக இருக்க வேண்டும் என்றும், தமிழ்நாட்டில் தொழில் முதலீடுகளை ஈர்க்க பல்வேறு முன்னெடுப்புகளை மேற்கொண்டதோடு, தொழில் தொடங்கிட மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12.2.2026) தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் சென்னையில் நடைபெற்ற புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செயலாக்க மாநாட்டில் (Conversion Conclave), 36,968 கோடி ரூபாய் முதலீட்டில் 60,823 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கிடும் வகையில் 71 புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.

அனைத்தும், செயல்பாட்டு நிலைகளுக்கு வரவேண்டும் என்றும் இலக்கு நிர்ணயித்தார்.

அவ்வாறே, புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்ட அனைத்து திட்டங்களும் தொடர்ச்சியாக கண்காணிக்கப்பட்டு, அத்திட்டங்களுக்குத் தேவையான ஆதரவுச் சேவைகளை மேற்கொண்டு வந்த காரணத்தால், பெரும்பாலான திட்டங்கள், தற்போது மேம்பட்ட செயல்பாட்டு நிலைகளை அடைந்துள்ளன.

இந்நிலையை மேலும் மேம்படுத்தும் வகையில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில், முதலீடுகள் செயலாக்க மாநாடு (Conversion Conclave) மேற்கொள்ளப்பட்டது. தூத்துக்குடி, ஓசூர், கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய நகரங்களில் மேற்கொள்ளப்பட்ட முதலீட்டாளர்கள் மாநாட்டின்போது போடப்பட்ட பல புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் தற்போது மேம்பட்ட செயல்பாட்டு நிலைகளை அடைந்துள்ளன. அது போலவே, முதலமைச்சர் அவர்கள் பல்வேறு அயல்நாடுகளுக்கு அரசுமுறைப் பயணம் மேற்கொண்ட போது மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் தற்போது மேம்பட்ட செயல்பாட்டு நிலைகளை அடைந்துள்ளன. இத்திட்டங்கள் இன்று முதலமைச்சர் அவர்களால், அடிக்கல் நாட்டியும், தொடங்கியும் வைக்கப்பட்டன.

இந்த மாநாட்டின் போது, 36,968 கோடி ரூபாய் முதலீட்டில் 60,823 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கிடும் வகையில் 71 புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டது. அது போலவே, 31,934 கோடி ரூபாய் முதலீட்டில் 82,664 நபர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கிடும் வகையில் 52 முடிவுற்ற திட்டங்கள் தொடங்கி வைக்கப்பட்டது.

**சில முக்கிய திட்டங்களின் விவரங்கள்**

தூத்துக்குடி முதலீட்டாளர் மாநாட்டில், Kaynes டெக்னாலஜீஸ் நிறுவனத்துடன் Printed Circuit Boards (PCB). HDI PCB, Flexible PCB உற்பத்தி திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இன்றைய தினம், இத்திட்டத்திற்கு அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டது. இதன்மூலம், தூத்துக்குடி ஒரு மிகப்பெரிய மின்னணு உற்பத்தி மையமாக உருவாகும்.

முதலமைச்சர் அவர்களின் இங்கிலாந்து அரசுப் பயணத்தின்போது, Astra Zeneca நிறுவனத்தின் உலகளாவிய திறன் மைய விரிவாக்கம் அமைப்பதற்கான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது, இன்றையதினம் இத்திட்டம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

முதலமைச்சர் அவர்களின் ஜெர்மனி அரசுப் பயணத்தின்போது, Knorr Bremse நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. ரயில்வேத் துறையில், ஈர்க்கப்பட்டுள்ள மிகப் பெரிய திட்டமாகும் இது. ரயில்களுக்கான, கதவுகள் மற்றும் பிரேக்குகள் உற்பத்தி செய்வதற்கும், தொழில்நுட்ப உற்பத்தி மையம் மற்றும் செயற்கை நுண்ணறிவு மையம் என்று பல்வேறு திட்டங்களில், இந்நிறுவனம் முதலீடு மேற்கொள்ள உள்ளது. சிப்காட் மாம்பாக்கம் தொழிற்பூங்காவில், இன்றைய தினம் இந்த உற்பத்தி திட்டத்திற்கான அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டுள்ளது.

இந்தியாவிலேயே நுகர்வோர் பொருட்கள் உற்பத்தியில் முன்னணி நிறுவனமான, டாபர் நிறுவனம், தென்னிந்தியாவிலேயே முதல் உற்பத்தி நிலையமாக, தமிழ்நாட்டைத் தேர்ந்தெடுத்து திண்டிவனத்தில் நிறுவ உள்ளனர். டாபர் நிறுவனம் பல்வேறு பொருட்களை உற்பத்தி செய்ய உள்ள இத்திட்டத்திற்கு நேற்று அடிக்கல் நாட்டப்பட்டது.

மேம்பட்ட மின்னணுவியல் துறையில், முன்னணி நிறுவனமான VVDN நிறுவனம், பொள்ளாச்சியில் தன்னுடைய திட்டத்தை பெரிய அளவில் நிறுவியுள்ளது. இதில் சிறப்பம்சம் என்னவென்றால், பொள்ளாச்சி மற்றும் சுற்றுப்புறப் பகுதிகளைச் சேர்ந்த பெண்களுக்கு சிறப்பு பயிற்சிகள் அளிக்கப்பட்டு, இந்நிறுவனத்தில் பெருமளவில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

டாடா குழுமத்தைச் சேர்ந்த டாடா சால்ட் நிறுவனம், இராமநாதபுரம் மாவட்டத்தில், சிப்காட் வாலிநோக்கத்தில், தனது திட்டத்தை நிறுவ உள்ளது. இத்திட்டத்திற்கு இன்று அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டது. இத்திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம், உலக முதலீட்டா ளர்கள் மாநாடு 2024ன் போது மேற்கொள்ளப்பட்டது.

உலகப் புகழ்பெற்ற நிறுவனமான ஜான்சன் எலக்ட்ரிக் நிறுவனம், மோட்டார்கள், மோட்டார் வாகன மின்னணுப் பொருட்கள், உயர்தர காந்தப் பொருட்கள் ஆகியவற்றின் உற்பத்திக்காக, இராணிப்பேட்டை சிப்காட் பனப்பாக்கம் வளாகத்தில், தனது திட்டத்தினை நிறுவ திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்திற்கு நேற்று அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டது. இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கோயம்புத்தூரில் நடைபெற்ற முதலீட்டு மாநாட்டின் போது மேற்கொள்ளப்பட்டது.

நேற்று முன்தினம் அடிக்கல் நாட்டப்பட்ட மற்றும் தொடங்கப்பட்ட திட்டங்கள், இராமநாதபுரம், தூத்துக்குடி, திருச்சி, விழுப்புரம், தர்மபுரி, இராணிப்பேட்டை, திருப்பத்தூர், கோயம்புத்தூர், நாமக்கல், ஈரோடு உள்ளிட்ட மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களில் பரவலாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்**

முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் பாரத் பயோடெக் நிறுவனம், 5000 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 5000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு என்ற வகையில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் அமைக்க உள்ள உயிரியல் மற்றும் மருந்துகள் உற்பத்தி திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மற்றும் ஹுண்டாய் மோட்டார் இந்தியா ஃபவுண்டேஷன் நிறுவனம், 7000 மாணவர்களுக்கு திறன்பயிற்சி மேற்கொள்ளும் திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஆகிய 2 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

மேற்கூறிய திட்டங்கள், பல்வேறு துறைகளில், மாநிலம் முழுவதும் நிறுவப்பட உள்ளது என்பதுதான் இன்றைய மாநாட்டின் சிறப்பம்சமாகும்.

இந்நிகழ்ச்சியில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், மாநில திட்டக் குழுவின் செயல் துணைத் தலைவர் பேராசிரியர்

ஜெ. ஜெயரஞ்சன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி. அருண்ராய், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் மருத்துவர் தாரேஸ் அகமது, ஓம்ரான் ஹெல்த்கேர் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர்

டாகுடோ ஐவானகா, B.I.G. Tech நிறுவனத்தின் முதன்மை செயல் அலுவலர் ராஜு பாண்டியன், நார் பிரெம்ஸ் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மார்கஸ் பெர், பாரத் பயோ டெக் நிறுவனத்தின் செயல் தலைவர் கிருஷ்ணா எல்லா, டாபர் நிறுவனத்தின் முதன்மை செயல் அலுவலர் மோகித் மல்கோத்ரா உள்ளிட்ட தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

---

### 140 கோடி இந்தியர்களை

# டிரம்பிடம் சரணடைய வைத்த மோடி!

## மக்களவையில் ராகுல்காந்தி கடும் விமர்சனம்!

புதுடெல்லி, பிப்.14 -

**இந்தியா - அமெரிக்கா ஒப்பந்தம் மூலம் பாரத மாதாவை அரசு விற்றுவிட்டது. 140 கோடி இந்தியர்களை டிரம்ப்பிடம் மோடி சரண் அடைய வைத்துவிட்டார் என்று மக்களவையில் ராகுல்காந்தி குற்றம்சாட்டினார். மக்களவையில் பட்ஜெட் மீதான விவாதத்தில் பங்கேற்று எதிர்க்கட்சி தலைவர் ராகுல்காந்தி நேற்று முன்தினம் பேசியதாவது:-**


இந்தியா - அமெரிக்க இடைக்கால வர்த்தக ஒப்பந்தம் மூலம் அரசாங்கம் பாரத மாதாவை விற்று விட்டது.

இந்தியாவின் எரிசக்தி பாதுகாப்பு அமெரிக்காவிடம் ஒப்படைக்கப்பட்டு விவசாயிகளின் நலன்கள் சமரசம் செய்யப்பட்டு மொத்தமாக சரண் அடைந்து விட்டனர்.

பிரதமர் மோடியும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவலும் சிறிது காலத்திற்கு முன்பு போர் சகாப்தம் முடிந்து விட்டது என்று கூறினர். ஆனால் உண்மையில், நாம் போர் சகாப்தத்திற்குள் நகர்கிறோம். உக்ரைனில் போர் நடக்கிறது, காசாவில் போர் நடக்கிறது, மத்திய கிழக்கில் போர் நடந்து வருகிறது, ஈரானில் போர் அச்சுறுத்தல் உள்ளது. நம்மிடம் இன்னும் ஆபரேஷன் சிந்தூர் உள்ளது. நாம் ஒரு ஆபத்தான உலகத்திற்குள் நகர்கிறோம். நமது பலங்களை நாம் புரிந்து கொள்ள வேண்டும், மேலும் நமது நாட்டின் மைய பலம் நமது மக்கள்தான். நாட்டின் மக்கள், தரவு, உணவு வழங்கல் மற்றும் எரிசக்தி அமைப்பைப் பாதுகாக்க வேண்டியது அவசியம்.

**உங்கள் ஊழியர்கள் போல் பேசக் கூடாது!**

உண்மையிலேயே இந்தியா கூட்டணி அரசு இப்போது இருந்து, அமெரிக்காவு



டன் வர்த்தக ஒப்பந்த பேச்சுவார்த்தை நடத்தியிருந்தால், அது அதிபர் டிரம்பிடம் அவர் இந்தியாவை சமமாக நடத்த வேண்டும் என்று கூறியிருக்கும். இந்த சமன்பாட்டில் மிக முக்கியமான சொத்து இந்திய தரவுகள் என்பதை நாங்கள் (டிரம்பிடம்) முதலில் கூறுவோம். அமெரிக்கா டாலரைப் பாதுகாக்க விரும்பினால், இந்திய தரவு மிகப்பெரிய சொத்து என்பதை அது அங்கீகரிக்க வேண்டும். இரண்டாவதாக, நீங்கள் அதை அணுக விரும்பினால், நீங்கள் எங்களுடன் சமமாகப் பேசுவீர்கள், நாங்கள் உங்கள் ஊழியர்கள் போல் எங்களுடன் பேசக்கூடாது என்று நாம் அதிபர் டிரம்பிடம் கூறுவோம்

இந்தியா கூட்டணி அரசாங்கம் இந்தியாவின் எரிசக்தி பாதுகாப்பு குறித்து பேரம் பேச முடியாது. நாங்கள் எங்கள் எரிசக்தி பாதுகாப்பைப் பாதுகாக்கப் போகிறோம் என்றும் டிரம்பிடம் கூறியிருக்கும். மூன்றாவது விஷயம், உங்களிடம் விவசாய வளம் இருப்பதை நாங்கள் புரிந்து கொள்கிறோம், நீங்கள் விவசாயிகளைப் பாதுகாக்க வேண்டும், ஆனால் நாங்கள் எங்கள் விவசாயிகளையும் பாதுகாப்போம் என்று டிரம்பிடம் கூறியிருப் போம். இந்தியா கூட்டணி அரசாங்கம் தகவல்கள் நமது மிகப்பெரிய பலம் என்றுகூறும். இப்போது நாம் பேசுவோம். சமமாக பேச்சுவார்த்தைக்கு அங்கு செல்வோம். நாங்கள் பாகிஸ்தானுக்கு சமமாக இருக்க மாட்டோம். பாகிஸ்தான் ராணுவத் தலைவர் அவருடன் காலை உணவு சாப்பிடுவார் என்று டிரம்ப் முடிவு செய்தால், அதைப் பற்றி எங்களுக்கு ஏதாவது சொல்ல வேண்டும்.

மோடி அரசு எரிசக்தி மற்றும் ஆயுதமயமாக்கல் பற்றிப் பேசுகிறது. ஆனால் நமது நிதி மற்றும் நமது ஆற்றலை நமக்கு எதிராக அமெரிக்கா ஆயுதமாக்க அனுமதித்துள்ளது. இந்த ஒப்பந்தத்தின் மூலம், விவசாயிகளின் நலன்கள் சமரசம் செய்யப்பட்டுள்ளது, ஜவுளித் துறை அழிக்கப்பட்டுள்ளது,

**தேசமே விற்றுத் தீர்ந்துவிட்டது!**

எரிசக்தி பாதுகாப்பு அமெரிக்காவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இது ஒரு மொத்த சரணடைதல். இது ஒரு சோகம். ஏனெனில் இது பிரதமரின் சரணடைதல் மட்டுமல்ல; 140 கோடி இந்தியர்களின் எதிர்காலத்தை அமெரிக்க அதிபர் டிரம்ப்பிடம், பிரதமர் மோடி சரணடைய வைத்துள்ளார்.

அமெரிக்காவில் ஒரு வழக்கு இருக்கும். பா.ஜ.வின் நிதிக் கட்டமைப்பைப் பாதுகாக்க விரும்பியதால் அவர் சரணடைந்துள்ளார். நாம் கொந்தளிப்பான காலகட்டத்தை நோக்கிச் செல்கிறோம், தேசமே விற்றுத் தீர்ந்துவிட்டது. அதன் தரவுகள் விற்கப்பட்டுள்ளன, அதன் விவசாயிகள் விற்கப்பட்டுள்ளனர், எங்கள் அனைத்து மென்பொருள் பொறியாளர்களும் விற்கப்பட்டுள்ளனர். சிறு மற்றும் நடுத்தர வணிகங்கள் விற்கப்பட்டுள்ளன, எங்கள் படைகள் மற்றும் எங்கள் எரிசக்தி பாதுகாப்பு விற்கப்பட்டுள்ளன.

**விவசாயிகள் புயலை எதிர்கொள்கின்றனர்!**

டிஜிட்டல் வர்த்தக விதிகள் மீதான கட்டுப்பாட்டை கைவிட்டுள்ளது, தரவு உள்ளூர்மயமாக்கலை நீக்கியுள்ளது, அமெரிக்காவிற்கு தரவு சுதந்திரமாக செல்ல அனுமதித்துள்ளது, டிஜிட்டல் வரியை கட்டுப்படுத்தியுள்ளது. மூலக் குறியீடு வெளிப்படுத்தலைத் தள்ளுபடி செய்துள்ளது. பெரிய தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு 20 ஆண்டு வரி விதி முறைகளை வழங்குகிறது.

இந்திய வரலாற்றில் முதல்முறையாக, நமது விவசாயிகள் ஒரு புயலை எதிர்கொள்கின்றனர். ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் இயந்திரமயமாக்கப்பட்ட அமெரிக்க பண்ணைகளுக்கு நீங்கள் கதவைத் திறந்து விட்டீர்கள், இது எங்கள் சிறு விவசாயிகளை நசுக்குகிறது. இது அவமானகரமானது, உங்களுக்கு முன்போ அல்லது உங்களுக்கு பின்னரோ எந்த பிரதமரும் இதைச் செய்ய மாட்டார்கள்.

இவ்வாறு ராகுல்காந்தி பேசினார்.